# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



## காலாண்டு இதழ்
## (ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
## ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

*+917299587879*

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து‘ பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்**
**முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2**

**குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்**
**மெ.பேபி நிஷாந்தினி**

**பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில்  மரக்கலங்கள்**
**ப.ராம்குமார்**

**புறநானூற்றில் உயிரியல் செய்திகள்**
**எம்ஜிராமச்சந்திரன். வெ**

**புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
**திருமதி கா.சுகன்யா,**

**செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு**
**இரா.சினேகலதா**

**திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்**
**முனைவர் இரா.ஜெய்சங்கர்**

**திருக்குறளில் மருத்துவச் செய்திகள்**
**முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை**
**க.நித்தியா**

**அபிராமி அந்தாதி - ஒரு பார்வை**
**சா.கஸ்தூரி**

**வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்**
**முனைவர் த. சுபஜா**

**வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை**
**முனைவர்ப.தனஞ்செயன்**

**தெய்வங்களும் கோவில்களும்**
**அ.அறிவுக்கொடி**

**பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்**
**க.கார்த்திகா**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# *References to the Famine in Oral songs*

***M.Kalaiselvan***, *Phd Scholar, Department Of Tamil Studies In Foreign Countries, Tamil University, Tanjore*

***Dr. R. Kurinjivendan,*** *Professor & Head, Department Of Tamil Studies In Foreign Countries, Tamil University, Tanjore*

***Abstract:***

*Oral traditions are the source of many literary works. Oral traditions, which form the basis of rich literary works, contain many historical information. Oral songs have a unique specialty. They have detailed information of peoples birth to death. In this way, references to the famine that prevailed in Tamil Nadu are widely found in oral songs. In particular, oral songs have clearly recorded the ˙thathu varuda Pancham˙ that occurred during the colonial period and the miserable life of the people during the famine.*

***Keywords;*** *Colonial period, Thathu Varudap Pancham, oral songs, historical documentation*

## வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்

*கட்டுரையாளர்:* **ம.கலைச்செல்வன்,** *முனைவர்ப் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் — 10*

*நெறியாளர்:* **முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன்,** *பேராசிரியர் (ம) துறைத் தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர் — 10*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலக்கியங்கள் பலவற்றிற்கு வாய்மொழி வழக்காறுகள் மூலாதாரமாகத் திகழ்கின்றன. செழுமையான இலக்கிய ஆக்கங்களுக்கு அடித்தளமாக விளங்கும் வாய்மொழி வழக்காறுகள் பல வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. இவற்றுள் வாய்மொழிப்பாடல்கள் தனித்த சிறப்புடன் விளங்குகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையிலான மனிதனின் அனைத்து நிலைப்பாடுகளையும் பாடல்களாகப் பாடி வைத்துள்ளனர். அவ்வகையில் தமிழகத்தில் நிலவிய பஞ்சம் பற்றின குறிப்புகள் வாய்மொழிப்பாடல்களின் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக காலனியக்காலத்தில் ஏற்பட்ட தாது வருடப் பஞ்சம் குறித்தும்*

பஞ்ச காலத்தில் மக்களின் துன்பம் நிறைந்த வாழ்க்கை குறித்தும் வாய்மொழிப்பாடல்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளன.

**திறவுச் சொற்கள்:** காலனிய காலம், தாதுவருடப் பஞ்சம், வாய்மொழிப்பாடல்கள், வரலாற்று ஆவணம்

**முன்னுரை**

தமிழகம் காலம்தோறும் வெவ்வேறு நிலைகளிலான பஞ்சங்களை எதிர்கொண்டுள்ளதை வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறியமுடிகிறது. விவசாயத்தை முதன்மையாகக் கொண்ட நிலவுடமை சமூகமான தமிழர்கள் பிற்காலத்தில் உணவுக்கு வழியின்றி உயிர்நீத்த வரலாறும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழர்கள் எதிர்கொண்ட பஞ்சங்கள் குறித்து மேலைநாட்டினர், வரலாற்று ஆய்வாளர்கள் தெளிவாக விவரிப்பினும் மக்களின் குரலாக பதிவு செய்யப்பட்டுள்ள வாய்மொழிப்பாடல்கள் பஞ்ச கால நிகழ்வுகளைச் சித்திரிப்புகள் இன்றி ஆவணப்படுத்தியுள்ளன. அவ்வகையில், காலனியகாலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சம் குறித்தும் பஞ்சகாலத்தில் மக்களின் நிலைப்பாடு குறித்தும் வாய்மொழிப்பாடல்களின் பதிவுகள் மூலம் இவ்வாய்க் கட்டுரை ஆராய்கிறது.

**இந்தியாவில் பஞ்சம்**

காலனியகாலத்திற்கு முன்பே இந்தியர்கள் ஏராளமான பஞ்சங்களை எதிர்கொண்டுள்ளனர். குறிப்பாகத் தமிழர்களின் வாழ்க்கை முறை நிலத்தையும் உழவுத் தொழிலையும் சார்ந்திருந்தது. உரிய காலத்தில் மழைப்பொழிவு இல்லாத சூழல் பஞ்சமும் பசியும் ஏற்படக் காரணமாகின. இவ்வாறு ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்து, சங்க இலக்கியங்கள் முதலான தமிழ் இலக்கியங்கள் பலவும் பதிவு செய்துள்ளன. இதை, "12ஆண்டுகள் மழை பொழியாமல் இருந்து பாண்டிய நாட்டு மக்களும் புலவர்களும் இடம்பெயர்ந்த செய்தியைச் சிலப்பதிகாரமும் இறையனார் களவியல் உறையும் எடுத்துரைக்கின்றன. மணிமேகலை பசிதீர்க்க அமுதசுரபி ஏந்திய நிகழ்வும் இப்பின்னணியில் நிகழ்ந்த ஒன்றே" என்று க.ப.அறவாணன் விவரிக்கிறார். (க.ப. அறவாணன்: 2002: 203) 14ஆம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை பலமுறை பஞ்சங்கள் தோன்றியுள்ளன. இந்தியாவின் நீண்ட காலப் பஞ்சமாக மராட்டிய மாநிலத்தில் நிலவிய பஞ்சத்தைக் கூறலாம். இப்பஞ்சங்கள் குறித்து அருணாசலேசர் மீது வண்ணமும் தாது வருசத்துக் கரிப்புக் கும்மியும் என்னும் நூல் "கி.பி.1396இல் தோன்றிய பஞ்சம் 12ஆண்டுகள் நீடித்தது. இதனை 'துர்க்காதேவி பஞ்சம்' என்று அழைக்கின்றனர். இதனைப் போன்று தென்னிந்தியாவில் தமிழகத்திலும் 'துவாதச வருஷ பஞ்சம்' என்னும் பஞ்சம்

ஏற்பட்டதற்கான குறிப்புகளும் கிடைக்கின்றன.'' என்ற சான்றுகளை முன்வைக்கிறது. (ஸ்ரீனிவாசன் : 1985:07)

கி.பி1570 இல் திருநெல்வேலி கடற்கரைப்பகுதிகளிலும், கி.பி 1648 இல் கோவையிலும் ஏற்பட்ட பஞ்சங்கள் மக்களைப் பெரிதும் பாதித்தது. இவற்றுள், கி.பி 1876 இல் ஏற்பட்ட '**தாதுவருடப் பஞ்சம்**' தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெருவாரியான தமிழக மக்களின் இடப்பெயர்விற்கும் புலப்பெயர்விற்கும் இப்பஞ்சம் முக்கியக் காரணமாக அமைந்தது.

**தாது வருடப் பஞ்சம்**

தமிழக வேளான்குடி மக்களை அடிமைகளாகவும் அகதிகளாகவும் மாற்றிய தாதுவருடப் பஞ்சம் கி.பி 1876ஆம் ஆண்டு ஏற்பட்டது. இது "கலியுக ஆண்டு 4977 லும் சக ஆண்டு 1798 லும் தோன்றியது. இப்பஞ்சமானது தமிழ் ஆண்டு 'தாது' வருடத்தில் தோன்றியதால் **தாது வருடப் பஞ்சம்** என்று அழைக்கப்பட்டது.'' (ஸ்ரீனிவாசன் : 1985:07) தாது வருடப் பஞ்சம் குறித்து பல வரலாற்று நூல்களில் குறிப்புகள் காணப்படினும், மக்களின் குரல்களில் பதிவு செய்திருக்கும் நாட்டார் பாடல்கள் மிக முக்கியமான சான்றாதாரமாக விளங்குகிறது. தாது வருடப்பஞ்சம் உருவான ஆண்டு விவரம் குறித்து,

"அழிவில் சாலி வாகன வருஷம்
ஆயிரத் தேழு நூறோடு
இழிவில் லாத தொண்ணுற் றெட்டா
மின்பமா மிதைக் கேளுங்கடி
கலியு காப்தம் நாலா யிரத்து
கந்த தொள்ளாயி ரத்தொடு
குலவு மெழுபத் தேழு மேலே
கூடுந் தாது வருஷமாம்
தாது வருஷ மதனிலே
தங்கும் புரட்டாசி மாதமுதல்
தீது செய்யு மிந்தக் கரிப்பு
திடமாய் வந்ததைக் கேளுங்கடி'' (ஸ்ரீனிவாசன் : 1985:09)

என்னும் கும்மிப் பாடலானது தாது வருடப் பஞ்சம் உருவான காலத்தைத் தெளிவாக பதிவுசெய்துள்ளது. தாதுவருடப் பஞ்சம் கி.பி1876 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கி.பி.1878வரை நிலவியுள்ளதை இப்பாடலின் வழி அறியமுடிகிறது.

**பஞ்ச காலத்தில் மக்களின் நிலை**

பஞ்சகாலங்களில் மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டனர். உணவுத் தட்டுப்பாடும், உயிரிழப்புகளும் அதிகாமாகின. தாதுவருடப் பஞ்சகாலத்தில் பசியால் உணவின்றி இறந்தவர்களின் விகிதம் அதிகமானது. பசியின் கொடூரத்தில் மக்கள் இறந்துள்ளமையை,

"அஞ்சுநாள் ஆறுநாள் பட்டினியாக
அடங்கியிருந்தது வெகுஜனம்
கஞ்சித் தண்ணிருக்கு வழியில்லாமல்
கலங்கி சாகிறார் பாருங்கடி
வாந்தி பேதியினாலே வெகுஜனம்
வகை வகையாகச் சாகறதும்
காந்தல் கூலுக்கும் வழியில்லாமல்
காது மூடிச் சாகறதும்
பட்டினி யிருந்து சாப்பிட்டவருக்கு
பருத்த மேல்மூச் சுண்டாகி
அட்டியில்லாமல் களையை அடைந்து
அப்போதே சாகிறார் பாருங்கடி" (ஸ்ரீனிவாசன் : 1985:11)

என்னும் நாட்டார் பாடல் தெளிவாக விவரிக்கிறது. பஞ்ச காலத்தில் மக்கள் எத்தகைய கொடூரமான நிலையில் இறந்துள்ளனர் என்பதை இக்கும்மிப்பாடல் புலப்படுத்துகிறது. பசியினால் காதடைத்து இறந்தவர்களையும், பல நாள் பட்டினியாக இருந்து கிடைத்த உணவை உண்டதால், மேல்மூச்சு உண்டாகி இறந்தவர்களைப் பற்றியும் இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

**பஞ்சகால உணவுகள்**

பஞ்சகாலத்தில் மக்கள் உயிர்பிழைப்பதற்காகப் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். குறிப்பாகத் தங்களுடைய உணவுத் தேவைகளுக்கான அவர்களது வழிமுறைகள் மரபு ரீதியான உணவு முறைக்கு மாறாக இருந்தது. திருநெல்வேலி பகுதியின் ஆட்சியாளராக இருந்த திரு.மேக்குஹே கி.பி1877 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை ஆய்வுசெய்துள்ளார். அவ்வாய்வில், "அங்கிருக்கும் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி உணவிற்காக அலைய ஆரம்பித்துவிட்டதாகக் கூறுகிறார். அருகில் இருக்கும் காடுகளில் கிழங்குகளைத் தோண்டுவதன் மூலம் வாழ்ந்ததாகத் தெரிவிக்கிறார். திரு.மேக்குஹே தனது இந்தப் பயணத்தில் நூறு பேருக்கும் மேலான மக்கள் இதுபோன்று

உடல்நலத்திற்க்கு உகந்தது இல்லாத **கிழங்குகளைத்** தோண்டித் தின்பதைப் பார்த்ததாகப் பதிவுசெய்துள்ளார். **எறும்புப் புற்றுகளில்** இருந்து ஆறு முதல் எட்டு மணி நேரம் அலைந்து சேகரிக்கப்பட்ட ஒரு கையளவு தானியத்துடன் திரும்பிய பத்து பெண்களைத், தான் பார்த்ததையும் பதிவு செய்துள்ளார்"[14]. பெரும்பாலான மக்கள் உணவைப் பாதியாக குறைத்து ஒரு நேர உணவை மட்டும் உண்டு வாழ்ந்துள்ளனர். பசியைப் போக்குவதற்காக விஷக்கிழங்குகளை உணவாக உண்டுள்ளனர். ராமநாதபுரம் பகுதியை ஆய்வு செய்த திரு.டர்னர், "மக்கள் **கூம்புக்கிழங்கு** என்னும் ஒருவகையான மரவள்ளிக்கிழங்கு வகையை உண்கின்றனர். இதிலிருக்கும் விஷத்தை முறிக்க மூன்றுநாட்கள் கொதிக்கவைத்து அதிலிருந்து கஞ்சி செய்து குடிக்கின்றனர்" (வானதி:1877:27). என்று பஞ்ச காலத்தில் மக்கள் எவ்வாறு தங்களுக்கான உணவைத் தேடிக்கொண்டனர் என்பதை விவரிக்கிறார்.

பஞ்சகாலங்களில் விஷத் தன்மை வாய்ந்த மரவள்ளிக்கிழங்குகளை எவ்வாறு சமைக்கப்பட்டது என்பதனைச் செல்லக்கருப்பி என்னும் புதினம் விவரிக்கிறது. "மரவள்ளிக்கிழங்கை மெலிதாக சீவி கொதிதண்ணீரில் போட்டு அவித்துக் காயவைப்பது '**வாட்டுக்கப்பை**'. வருட கணக்கில் அதை வைத்துக்கொள்ளலாம். முதல்நாள் இரவே ஊறவைத்து மறுநாள் அவித்து உடைத்து தேங்காய், பச்சை மிளகாய், பூண்டு, சீரகம், மஞ்சள் சேர்த்து அரைத்த மசாலாவைச் சூட்டோடு குழைத்து தேங்காய் எண்ணெய் கொஞ்சம் ஊற்றி இறக்கினால் சுவை அப்படி இருக்கும். பஞ்சகாலங்களில் இந்த வாட்டுக்கப்பையும் கேப்பையும் சோளமும் கோதுமையும் பல வயிறுகளின் வாட்டத்தைப் போக்கியுள்ளது. வாய்க்கு ருசி என்பதை விட வயிற்றுக்குப் பசி என்பதுமட்டும்தான் பெரிய பிரச்சனையாய் இருக்கும்போது இப்படிப்பட்ட உணவுகளில் உள்ளம் நிறைவடைந்துவிடும்" (அல்லி பாத்திமா:2021:54) என்று பஞ்சகால உணவான கிழங்குவகைகளைச் சமைக்கும் முறையினை இப்புதினம் பதிவு செய்துள்ளது.

நாட்டார் பாடல்களில் மக்கள் பயன்படுத்திய உணவுப் பொருட்கள் குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

"ஆடு வித்து, மாடு வித்து
ஐயோ வருண தேவா! ....
................................
இச் சிக்காய் தின்ன பஞ்சம்
ஐயோ வருண தேவா!
இன்னும் தெளியலையே
ஐயோ வருண தேவா!
**காரைக்காய்த்** தின்ன மக்கள்

ஐயோ வருண தேவா!

**காதடைச்சு செத்த மக்கள்**

ஐயோ வருண தேவா!” (வானமாமலை நா:1964:68)

என்னும் வாய்மொழிப் பாடல், பஞ்சகாலத்தில் மக்கள் **காரைக்காய்** என்னும் ஒருவகையான காயை உணவுப்பொருளாக உட்கொண்டமையும், மேலும் கடுமையான பசியால் மக்கள் காதடைத்து இறந்த செய்தியினையும் பதிவு செய்துள்ளது.

தாதுவருடப் பஞ்சம் ஏழை பணக்காரார் என அனைவரையும் பாதிப்படையச் செய்துள்ளதையும் அறியமுடிகிறது. செல்வந்தர்கள் பலரும் புண்ணாக்கு, மலைக்கத்தாழைக் குருத்து போன்றவற்றை உணவாக உட்கொண்டமையை,

“பூரணமாகவே தாது வருஷம் பிறந்ததுவே

பஞ்சமும் அப்போதே.........

...................................

**சோளச்சோறு** வாயுக்கு சேராதென்று சொன்ன

சொகுசான மகராச மக்களெல்லாம்

மழுங்கலாய் துட்டுக்குப் **புண்ணாக்கு** வாங்கியே

மறைவுக்கு போவாராம் உண்பதற்கே

**புழுங்கலரிசி சாதம்** சேராதுன்னு சொன்ன

புண்ணிய மகராச மக்களுகளெல்லாம்

**மலைக் கத்தாழைக் குருத்தினைப்** பிடுங்கியே

மண்திட்டு மறைவிலே மடுக்கிண்ணு கடிப்பாராம் (வானமாமலை நா:1964:76)

என்னும் பாடல், செல்வந்தர்களும் பஞ்சகாலத்தில் பசியின் பிடியில் சிக்கித் தவித்ததை ஆவணம் செய்துள்ளது. இவ்வாறு பஞ்சகாலத்தில் மக்கள் எதிர்கொண்ட பல்வேறு சிக்கல்களை நாட்டார் பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

**முடிவுரை**

தமிழர்கள் காலந்தோறும் வெவ்வேறு பஞ்சங்களை எதிர்கொண்டிருப்பினும் தாதுவருடப்பஞ்சமானது வேளாண் குடிகளான தமிழர்களைத் தங்களின் இயல்பு நிலையில் இருந்து முற்றிலும் மாறுவதற்கு வழிவகுத்துள்ளது. இப்பஞ்சம் குறித்து ஏராளமான வரலாற்றுக் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்குச் சான்றாக வாய்மொழிப்பாடல்கள் திகழ்கின்றன. மேலும், பஞ்ச கால நிகழ்வுகளை எவ்வித சித்திரிப்புகளும் இன்றி வாய்மொழிப்பாடல்கள் ஆவணப்படுத்தியுள்ளன என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் முடிவாக அமைகிறது.

*Reference Books*

1. *Aravaanan K.P., thamizar adimaiyaanathu yen? Evvaaru?.,thamiz kottam., Chennai., 2002*
2. *Vaanathi., 1877 thadhu varudap panjam., kizakku pathippakam., Chennai., 2022*
3. *Allifathima., chella karuppi., ezuththu., 2021*
4. *Vaanamamalai N., thamizar naattu paadalkal., New century book house., Chennai., 1964*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com